மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். உட்காருங்கள். வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

120—

தங்கும் விடுதி

***680—திரு. எஸ். ஆஸ்டின்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி தொகுதி, சுசீந்திரத்திலுள்ள அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தற்காலிக தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில்கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி தொகுதி, சுசீந்திரத்திலுள்ள அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாண்புமிகு அம்மாவின் அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.*

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சுசீந்திரம் பகுதியிலே இருக்கக்கூடிய அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயிலுக்கு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்வதற்காக வருகின்றார்கள். ஆனால் அங்கே அவர்கள் தங்குவதற்குப் போதிய இடவசதி இல்லை. குறிப்பாக மூன்று முக்கிய திருவிழாக்கள் அங்கே கொண்டாடப்படுகின்றன. சித்திரை மற்றும் மார்கழி திருவிழாக்கள் தேரோட்டத்தோடு 10 நாட்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு திருவிழாவிற்கும் வெளியூர்களிலிருந்து கிட்டத்தட்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வந்து, கலந்துகொள்கிறார்கள். இன்னும் குறிப்பாக, அங்கே இருக்கக்கூடிய பிரசித்திபெற்ற ஆஞ்சநேயரை தரிசிப்பதற்காக ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றார்கள். குறிப்பாக, தீபாவளித் திருநாளையொட்டி அங்கே ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா என்று ஒரு விழா நடைபெறுகிறது. அந்த விழாவில் கிட்டத்தட்ட ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொள்கிறார்கள். குறிப்பாக 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வெளியூர்களிலிருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வந்து கலந்துகொள்கிறார்கள். சாதாரணமாக, கோயில் நடை என்பது காலை 4.30 மணிக்குத் திறக்கப்பட்டு பிற்பகல் 1.00 மணிக்கு அடைக்கப்படுகிறது. பின்னர் மாலை 5.00 மணிக்குத் திறக்கப்பட்டு, இரவு 8.30 மணிக்கு அடைக்கப்படுகிறது. இதற்கு இடைப்பட்ட நேரத்தில் வரக்கூடிய பக்தர்கள் தங்குவதற்குப் போதுமான இடவசதி இல்லாமல், கோயிலுக்கு முன்பே தரையிலே படுத்து இரவையும், பகலையும் கழிக்கக்கூடிய நிலை இருந்துவருகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை பரிசீலனை செய்து, தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ ஒரு தங்கும் விடுதியை அந்தப் பகுதியிலே அமைத்துக் கொடுக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயில் சுசீந்திரம் ஊராட்சிக்குட்பட்ட திருக்கோயிலாகும். சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயிலில் பக்தர்களின் நன்மையைக் கருதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, வாகனங்கள் நிறுத்தும் வசதி, பாதுகாப்பு வசதி மற்றும் கலையரங்கம் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் பக்தர்களுக்கு சிறிய நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வசதியாக திருக்கோயிலில் கட்டடம் குறைந்த வாடகையில் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கோரிக்கையின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்று, தற்காலிகமாக ஒரு* shed *அமைக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.*

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக* shed *அமைக்கின்றபொழுது, வெளியூர்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வரக்கூடிய பக்தர்களுக்கு அது வசதியாக இருக்காது. ஏற்கெனவே கோயிலுக்கு முன்பாக கிட்டத்தட்ட 95 சென்ட் நிலம் அங்கே இருக்கின்றது. தற்போது அதிலே ஒரு கலையரங்கம் செயல்பட்டு வருகிறது. அந்தக் கலையரங்கத்தின் முன்பகுதியிலே தற்காலிகப் பந்தல் அமைத்து, அதில் விழாக் காலங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தற்காலிகப் பந்தல் அமைப்பதற்குக் கோயில் நிருவாகத்திற்கு சுமார் ரூபாய் 2 இலட்சத்திற்கு மேற்பட்ட பணம் செலவாகிறது. எனவே, இந்த அரசு அந்த கலையரங்கம் கட்டப்பட்டுள்ள இடத்தையும் உள்ளடக்கி, கீழ்ப் பகுதியில் ஒரு திருமண மண்டபமும், மேல் பகுதியில் நிரந்தரமாக பக்தர்கள் தங்குவதற்கு ஒரு தங்கும் விடுதியும் அமைத்துக் கொடுத்தால், அது ஆலயத்திற்கும் வருவாயை ஏற்படுத்திக் கொடுக்கும்; வரக்கூடிய பக்தர்களுக்கும் வசதியை ஏற்படுத்திக்கொடுக்கும் என்ற வகையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை மறுபரிசீலனை*

செய்து, நிரந்தரமாக தங்கும் விடுதியும், திருமண மண்டபமும் அமைத்துக்கொடுப்பதற்கு முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனி வரும் காலங்களில், தேவைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று, அந்த இடத்தில் நிரந்தரமாக ஒரு shed அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் நல்லாட்சியை அடிபிறழாமல் வழிநடத்தி, மக்களின் முதல்வராக விளங்கும் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவருக்குத் துணையாக இருந்து வரும் மாண்புமிகு அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். எங்களது மாவட்டத்தைச் சிறப்பாக வழிநடத்தும் கொங்கு நாட்டு தளபதி மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்குகிறேன். நான் கேட்டவுடனே எனக்கு அனுமதியளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

கோவையிலே பிரசித்திபெற்ற தண்டு மாரியம்மன் கோயிலும், இலட்சுமி நரசிம்ம பெருமாள் கோயிலும் உள்ளன. இந்த இரண்டு கோயில்களுக்கும் திருப்பணிகள் மிகவும் காலதாமதமாக நடைபெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இரண்டு கோயில்களிலும் திருப்பணிகளை விரைவாக முடித்து, கும்பாபிஷேகம் நடத்திட நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய திருக்கோயில்களில், திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுவருகின்றன. மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, மேலும் விரைவாக அத்திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து, கும்பாபிஷேகம் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*)இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறும்போது, சிறைக் கைதிகள் முன்விடுதலை குறித்து செய்தி வெளியிட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக இந்தச் சட்டமன்றத்தின் மரபினைப் பற்றி நான் ஒரு விளக்கத்தை அறிந்துகொள்ள விரும்புகிறேன். இன்று 4–6–2018 தேதியிட்டு, செய்தி வெளியீடு எண் 354 என்று குறிப்பிட்டு, இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை மூலமாக ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அறிவிப்பு என்னவென்று கேட்டால், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவையொட்டி, தமிழக சிறைகளில் இருக்கக்கூடிய சிறைவாசிகளை முன்விடுதலை செய்திட வேண்டுமென்று பரிசீலிக்கப்பட்டு, அந்த அடிப்படையிலே 25–2–2018 அன்று, 10 ஆண்டுகள் தண்டனைக் காலம் நிறைவு செய்திருக்கக்கூடிய*